**அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் ஜனவரி மாதம் (06.01.2022) ஆம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31113/2021/அம்ருட்–2 நாள்.05.01.2022ன்படி, **15வது மத்திய நிதிக்குழு மானிய நிதித்திட்டம் (15TH CENTRAL FINANCE COMMISSION UN TIED GRANT) 2021-22** ஆம் ஆண்டு திட்டநிதியின் மூலம் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சியில் உள்ள பொது மயானத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 47.80 |
| | **மொத்தம்** | **47.80** |

**அலுவலகக்குறிப்பு**:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1312,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.2**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தொற்றின் தடுப்பு நடவடிக்கையாக,பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக தெருமுனை பிரச்சாரம் மற்றும் நாடகங்கள் நடத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து முத்தமிழ் கலைக்குழுவின் வாயிலாக,பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திட தெருமுனை பிரச்சாரம் மேற்கொள்ளும் வகையில் ஆகும் உத்தேச செலவினம் ரூ.13,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு : –** 1 .மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்க்கலாம்

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்

**தீர்மான எண்.1313,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.3**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட **15-வது மத்திய நிதிக்குழு மானிய நிதித்திட்டம் (15TH CENTRAL FINANCE COMMISSION UN TIED GRANT) 2020-21**ன் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-10,ரெங்கப்பகவுடர் தெரு,வார்டு எண்-12,ஜக்கன நாயக்கர் தெரு மற்றும் வார்டு எண்-20, வடுகுவண்ணார் தெரு ஆகியவற்றில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசை பம்பிற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து , புதிய மின் மோட்டார் பொருத்துதல். | 2.75 |
| **2** | கூடலூர் நகராட்சி வார்டு எண்-02,பட்டாளம்மன் கோவில் தெரு,வார்டு எண்-3,எல்லைத்தெரு குறுக்கு தெரு , வார்டு எண்.5 ,AMC தெரு மற்றும் வார்டு எண்-5,நகராட்சி பொது மயானம் | 3.75 |

| | | |
|---|---|---|
| | ஆகியவற்றில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசை பம்பிற்கு புதியதாக பெடஸ்டல் (Pedestal Raising) அமைத்தல். | |
| | **மொத்தம்** | **6.50** |

**அலுவலகக்குறிப்பு**:

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1314,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியில் 24.01.2022ம் தேதி தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கூடலூர் நகராட்சிக்கு நகராட்சி நிலை சட்ட வழக்கறிஞராக (STANDING COUNCEL) திரு.த.செல்லபாண்டி BA BL.. கதவு எண்.18B, வார்டு எண்-1, வீரணத்தேவர் சந்து, கூடலூர் (செல்.7200320265) என்பவரை நியமனம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1315,அனுமதிக்கப்பட்டது.**